


தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்றிருக்கும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 11.12.2024 அன்று இந்தோனேசியாவிற்குச் சென்று கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை இந்தோனேசியா தமிழர்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாடினார். அப்போது கார்த்திகேயன், கலையரசன், மணிகண்டன், அரவிந்த், சிவா, சுரேஷ், நாகா, வி.பி.திராவிடமணி ஆகியோர் உடனிருந்தனர். அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (12.12.2024) மலேசியாவில், மலேசியா தி.மு.க. அயலக அணியின் சார்பில், மலேசியா அயலக அணி பொறுப்பாளர் முகம்மது பிர்தௌஸ் கான், துணை பொறுப்பாளர் முஹம்மது ஜெயிலானி, தொழிலதிபர் E&Y சாகுல் ஹமீது மற்றும் அயலக அணி நிர்வாகிகள் சார்லஸ், ஹமீது, ஜெய்துத்தீன், முகம்மது ஷபீக் ஆகியோர் முன்னிலையில், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை மலேசியா கழகத் தோழர்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சையத்ஹபீஸ், நாகை ஏ.கே.எஸ்.முருகன் மற்றும் அயலக கழக உடன்பிறப்புக்கள் ஏ.கே.பி.ஆரிப், சிவா, அறந்தாங்கி ராஜா முகமது ஆகியோர் உடனிருந்தனர்.

### கெங்கவல்லியில் – கால்நடை –

# விலங்கின உயர் ஆராய்ச்சி நிலையம் முதல்வரால் - விரைவில் திறந்து வைக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தகவல்!

**சென்னை, டிச.14-**

**கெங்கவல்லியில் கால்நடை - விலங்கின உயர் ஆராய்ச்சி நிலையம் விரைவில் முதல்வரால் திறந்து வைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**



இதுகுறித்து சட்டப்பேரவையில் கெங்கவல்லி தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் அளித்த பதிலும் வருமாறு:-

**அ. நல்லதம்பி:** மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—கெங்கவல்லி தொகுதி, கோவிந்தம் பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைசசர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன்:** உறுப்பினர் அவர்கள், கெங்கவல்லி தொகுதி, கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்கள். அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ. நல்லதம்பி:** கோவிந்தம் பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று கேள்வி கேட்டிருந்தேன். அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். எனினும், அதுகுறித்து மீண்டும் பரிசீலனை செய்து, வாய்ப்பு இருந்தால் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன்:** ஒரு பகுதியில் புதியதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமெனில், அப்பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் அப்பகுதியில் ஏற்கெனவே உள்ள கால்நடைக் கிளை நிலையங்களுக் கிடையேயான தூரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று விதிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை 3,000க்கும் அதிகமாகவும், அப்பகுதியில் 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் வேறு கால்நடைக் கிளை நிலையங்கள் ஏதும் இல்லாதபட்சத்தில் முதலில் கால்நடைக் கிளை நிலையம் துவக்கப்படுகிறது. பின்னர், அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000க்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அது கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படுகிறது. அந்த மருந்தகத்திற்கு தினசரி 40 கால்நடைகளுக்கும் மேல் சிகிச்சைக்கு வரும்பட்சத்தில் அது கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படுகிறது.

உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள, கோவிந்தபாளையம் கிராமத்தில் இது வரை கால்நடைக் கிளை நிலையம் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. அக்கிராமத்திலுள்ள மொத்த கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,630 ஆகும். மேலும், அருகில் செயல்பட்டு வரும் ஆரகளூர் கால்நடை மருந்தகம் 6 கி.மீ. தொலைவில் உள்ளது. தற்போது கோவிந்தம் பாளையம் கிராமத்தில் 3,000க்கும் அதிகமாக கால்நடை அலகுகளின் எண்ணிக்கை இருப்பதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் உள்ளன. அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ.நல்லதம்பி:** அடுத்த கோரிக்கையைத்தான் சொல்லப் போகிறேன். அமைச்சர், கோவிந்தபாளையம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி, தலைவாசல் கூட்ரோட்டில் உள்ள சேலம்சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ரூ.1,022 கோடியில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் ஆசியாவிலேயே மிகப்பெரிய உலகத் தரம் வாய்ந்த சர்வதேச கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைந்துள்ளது.

மேலும் பால், இறைச்சி மற்றும் பதப்படுத்தும் ஆலைகள், கால்நடை உற்பத்தி நுட்பங்களை உள்ளடக்கிய வளாகங்கள், 15 சிறப்பு துறைகளுடன்கூடிய அனைத்து கட்டமைப்புகள் நிறைவடைந்தும், இன்று வரை பயன்பாட்டிற்குக் கொண்டுவராமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்தக் கால்நடைப் பூங்காவை அரசு பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எந்தக் கட்சி கொண்டு வருகின்றது, எந்தக் கட்சி நடைமுறைப்படுத்துகின்றது என்று எண்ணாமல், எந்த நல்ல திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காக எங்களுக்கு ஆணைகள் வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையில், அதற்கான பணிகள் வெகு சீக்கிரமாக நடைபெற்று வருகிறது. முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் அந்தக் கால்நடை மற்றும் விலங்கின உயர் ஆராய்ச்சி நிலையம் வெகு சீக்கிரத்தில் திறக்கப்படும் என்பதை உறுப்பினருக்கு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### எல்லோருக்குமான ஆட்சியாக இருக்கிறது இந்த ஆட்சி!

# பேருந்து வசதிகள் குறித்த - சட்டப் பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உறுதி!

**சென்னை, டிச. 14 -**

**எல்லோருக்குமான ஆட்சியாக இருக்கிறது இந்த ஆட்சி என்றும் பேருந்து வசதி கேட்டுள்ள உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குறிப்பிட்டார்.**



இது குறித்து சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:

**ப.அப்துல் சமது :** போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா? மணப்பாறையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பாலக்குறிச்சி மற்றும் புதுக்கோட்டை வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் ப. அப்துல் சமது அவர்களின் கோரிக்கையான மணப்பாறை முதல் இராமேஸ்வரம் புதிய பேருந்து வழித்தடம் பாலக்குறிச்சி மற்றும் புதுக்கோட்டை வழியாக கேட்டிருக்கிறார். இது புதிய வழித்தடம் மற்றும் இது சற்று சுற்றிப்போகின்ற வழித்தடமாகவும் இருக்கின்றது. தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் லிமிடெட் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மண்டலம் மூலம் போதிய பேருந்துகள் இராமேஸ்வரத்திற்கு இயக்கப்படுகிறது என்பதை தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திப. அப்துல் சமது:** இராமேஸ்வரம் என்பது இந்து பெருமக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது இடம் என்பது நாமெல்லாம் அறிந்ததே. என்னுடைய தொகுதி மணப்பாறையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு அதிகமான பக்தர்கள் செல்லக்கூடிய நிலையில், இது ஒரு நீண்டகால கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால், அமைச்சர் உடனடியாக அந்தப் பேருந்து வழித்தடத்தை ஏற்படுத்தி தருமாறு தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** இந்த கோரிக்கையில் உள்ளபடி மணப்பாறை-இராமேஸ்வரம் என்பது திருச்சி- புதுக்கோட்டை வழித்தடத்தில் தினசரி இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை மண்டலம்மூலம் திருச்சி, இராமேஸ்வரம் வழி பாலக் குறிச்சி, பொன்னமராவதி வழித்தடத்தில் தினசரி இரண்டு நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது இப்பேருந்தில் பாலக்குறிச்சியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு நேரடி பயணிகள் பயன்பாடு என்பது மிகக்குறைவாக இருக்கிறது. ஒருநாளைக்கு ஒரு பயணி, இரண்டு பயணிகள் தான் சென்று வருகின்ற நிலை இருக்கிறது. இப்பேருந்துகளில் சராசரி பயணிகளின் அடர்வு என்பது 72 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. எனவே, மணப்பாறை மற்றும் பாலக்குறிச்சியில் இருந்து, நேரடியாக இராமேஸ்வரம் செல்வதற்கு ஏற்கெனவே பேருந்து வசதி உள்ளது. இவைத்தவிர மணப்பாறை, திருச்சி வழித்தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் தினசரி 345 புறப்பாடுகள் என பேருந்து வசதி இருக்கிறது. அதனை பயன்படுத்தி திருச்சி சென்று, அங்கிருந்து திருச்சி-இராமேஸ்வரம்புதுக்கோட்டை வழியாக ஒவ்வொரு 45 நிமிட இடைவெளியில் தினசரி 36 புறப்பாடுகள் உள்ளன. எனவே, அதை மக்கள் ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறார்கள். மேலும், மணப்பாறை-புதுக்கோட்டை -விராலிமலை-இலுப்பூர் வழியாக ஒவ்வொரு இருபது நிமிட இடைவெளியில் தினசரி 52 புறப்பாடுகள் என போதுமான பேருந்து வசதிகள் உள்ளது. எனவே, இந்த வசதியை மணப்பாறை பகுதி மக்கள் இராமேஸ்வரம் செல்வதற்கு போதுமானதாக இருக்கிறது. அதனை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏற்றவகையில் உள்ளது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப. அப்துல் சமது:** மீண்டும் அதை நேரடியாக மணப்பாறையில் இருந்து செல்வதற்கு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, என்னுடைய மணப்பாறை தொகுதியில் துவரங்குறிச்சி, புத்தாநத்தம் உள்ளிட்ட பகுதிகளில் திருப்பூரில் இருந்து துணிகளை வாங்கிவந்து, உள்ளாடைகள் உள்ளிட்ட ஆயத்த ஆடைகள் தயாரிக்கக்கூடிய பணிகள், தொழிற்கூடங்கள் அதிகமாக இருக்கிறது. அதனால் திருப்பூர் உடன் அந்த மக்களுக்கு நிறைய தொடர்பு இருக்கின்ற காரணத்தினால் அந்தத் தொழிலாளர்கள் சென்று வரக்கூடிய வகையில் வசதியாக துவரங்குறிச்சி, புத்தாநத்தம், மணப்பாறை, திண்டுக்கல் வழியாக திருப்பூர் செல்வதற்கு ஒரு பேருந்து இயக்கவேண்டும். இந்தப் பேருந்தில் வேளாண் குடிமக்கள் உற்பத்தி செய்யக்கூடிய, சிறு விவசாயிகளுடைய பொருட்கள், ஒட்டன்சத்திரம் சந்தைக்கு செல்வதற்கும் இந்தப் பேருந்து வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தப் பேருந்தை அதாவது துவரங்குறிச்சிபுத்தாநத்தம் மணப்பாறை திண்டுக்கல் வழியாக திருப்பூருக்கு பேருந்து இயக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் ப. அப்துல் சமது அவர்கள் தொப்பியும், தாடியும் இருக்க முழு மார்க்கவாதி, இருந்தாலும் இந்து மக்களின் நலனில் அக்கறைகொண்டு இராமேஸ்வரத்திற்கு பாலக்குறிச்சி வழியாக பேருந்துவசதி கேட்டிருக்கிறார். அது ஆய்வு செய்யப்பட்டு, தேவையிருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே இந்த அரசு சமய சார்பின்றி எல்லோருக்குமான ஒரு அரசாக செயல்பட்டு வருவதை அவர் அறிவார். அதிலும் குறிப்பாக கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்தில், ஏற்கெனவே நவகிரக கோயிலுக்கென்று ஒரு தனி சுற்றுவட்டப்பேருந்து இயக்கப்படுகிறது. 750 ரூபாய் செலவு செய்து, அந்த பேருந்தில் ஒருநாள் முழுவதும் நவகிரக கோயிலுக்கு செல்லலாம். அதேபோல கும்பகோணம் சுற்றி இருக்கின்ற 6 முருகன் தலங்களுக்கு ஒரு சுற்றுவட்டப்பேருந்து ஏற்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது இல்லாமல் நாகூரில் கந்தூரி விழா நடைபெற்றுகொண்டிருக்கின்ற வேளையில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

வேளாங்கண்ணியில் விழா வருகிறபோது சிறப்புப் பேருந்து இயக்கப்படுகிறது. நாளை வைக்கத்திலே பெரியாருடைய நினைவாக நடைபெறுகின்றநூற்றாண்டு விழாவிற்கும் பேருந்து இயக்கப்படுகிறது. திராவிட மாடல் முதல்வர் ஆட்சி, எல்லோருக்குமான ஆட்சியாக இருக்கிற இந்த ஆட்சி உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதேபோல், அவர் திருப்பூருக்குச் செல்வதற்கு, அந்த மக்கள் பணி நிமித்தமாக செல்வதற்கும், ஒட்டன்சத்திரம் சந்தைக்குச் செல்வதற்குமான பேருந்து வழித்தடத்தைக் கோரியிருக்கிறார். அது ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


**அமைச்சர் ஐ.பி.செந்தில் குமார்:** இன்றைக்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்கிற கையேடு வழங்கப்பட்டுள்ளது. அதிலே நாங்கள் வைத்த கோரிக்கை ஒன்று குறித்த செய்தியை முதல்வர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு அதை கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், நேற்றைக்கு கேள்வி நேரத்திலே பேசுகிறபோது, இந்த ஆண்டு மலைப் பகுதிகளுக்கு புதிய பேருந்துகளை நாங்கள் வழங்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். நான் ஏற்கெனவே 18 வழித்தடங்கள் கேட்டிருக்கிறேன். அதிலே குறிப்பாக கொடைக்கானலிலிருந்து பழனி மலைப் பிரிவு ரோடு, பேத்துப்பாறை, பாரதி அண்ணா நகர், கணேஷபுரம் பகுதிக்கு ஒரு வழித்தடமும், அதேபோல கொடைக்கானல், பெருமாள்மலை, பண்ணைக்காடு, மங்கலம்கொம்பு, கே.சி.பட்டி, குப்மாபட்டி, பெரியூர், பள்ளத்துக்கால்வாய், பாச்சலூர், வடகாடு வழியாக ஒட்டன்சத்திரத்திற்கு ஒரு புதிய வழித்தடத்தையும் இந்த ஆண்டு வழங்கிட போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கிடுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, அதை ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர், அன்பு சகோதரர் செந்தில்குமார் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, ஏற்கெனவே கொடைக்கானலுக்குச் செல்கிற பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை அவரே துவக்கி வைத்தார். அந்த மலை வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்பது அவருடைய கோரிக்கையாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் புதிய பேருந்துகளை வாங்குவதற்கு உத்தரவிட்டு, அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதில் மலைப் பகுதியில் இயக்குவதற்கான cut chase பேருந்துகளும் வாங்கப்பட்டு body கட்டப்பட்டு வர இருக்கின்றன. அவை வருகிறபோது உறுப்பினர் செந்தில்குமார் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை மு. இயலரசன்
### டிசம்பர் 14 (1992)



இளமைப் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய பின்னர் கழகக் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரப்பியவர்.

ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பணிக்காக தனது பணியினைத் துறந்தவர்.


'தன்மானம்' என்ற வார இதழ் நடத்தியவர்.

“ஈட்டி முனைபோல் கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் எடுத்தெறிந்து வீசுபவர்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மோகனூர் ப.சின்னு
### டிசம்பர் 14 (1995)



திராவிட இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வட்டப் பிரதிநிதி, துணைச் செயலாளர், கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து, மோகனூர் பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்

சேலம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராகவும் – மோகனூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த கறுப்புக் கொடி, இலங்கைத் தமிழர், கைலாசம் கமிஷன் எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.